செ.வெ.எண்: 713 நாள்: 04.11.2020

**தஞ்சாவூர் மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் வளர்ச்சித் திட்டப் பணிகளை மாவட்ட ஆட்சித் தலைவர் ம.கோவிந்த ராவ் இ.ஆ.ப. அவர்கள் நேரில் ஆய்வு.**

தஞ்சாவூர் மாநகராட்சிக்குட்பட்ட ராஜாகோரி பகுதி,மேம்பாலம் பகுதிகளில் வளர்ச்சி திட்ட பணிகளை மாவட்ட ஆட்சித் தலைவர் ம.கோவிந்தராவ் இ.ஆ.ப. அவர்கள் இன்று(04.11.2020) நேரில் ஆய்வு மேற்கொண்டார்கள்

தஞ்சாவூர் மாநகராட்சி ராஜாகோரி என்ற இடத்தில் சுமார் 14 ஏக்கர் பரப்பளவு கொண்ட மாநகராட்சி மயானத்தை பார்வையிட்ட மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் மயானங்கள் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளதா? பராமரிப்பு பணி மேற்கொள்ளப்பட்டுதா? என நேரில் ஆய்வு மேற்கொண்டார்கள் தொடர்ந்து ரூபாய் 25 லட்சம் மதிப்பீட்டில் சீர்மிகு நகரமைப்பு திட்டத்தின் கீழ் குப்பை தரம் பிரிக்கும் மையத்தில் நடைபெற்றுவரும் பணிகளை நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்து பணிகளை விரைந்து முடித்திட அறுவுறுத்தினார்.

பின்னர் மயானத்துக்கு அருகில் உள்ள பொது சுகாதார மையத்தை பார்வையிட்டு சுகாதார மையத்தில் கழிவறை,குளியலறை போன்றவை சுத்தமாகவும்,சுகாதாரமும் பராமரித்திட அறிவுறுத்தினார். தொடர்ந்து வடவாறு அருகே அமைந்துள்ள ராஜகோரி குளத்தை பார்வையிட்டு குளத்திற்கு வரும் வரத்து வாய்க்கால் மற்றும் தண்ணீர் வெளியேறும் வாய்க்கால் ஆகியவற்றை பார்வையிட்டு மண் மேடுகளை அகற்றி குழாய் மற்றும் குளத்தை சீர்செய்ய அறிவுறுத்தினார்.

அப்பொழுது அப்பகுதி பொதுமக்களிடம் குறைகளை கேட்டறிந்தார் சில நேரங்களில்குடிநீர் தட்டுப்பாடு உள்ளது என தெரிவித்த பொதுமக்களிடம் உடனடியாக போதுமான குடிநீர் கிடைத்திட அலுவலர்கள் வழி செய்திட வேண்டும் என உத்தரவிட்டார்.அப்பகுதியில் உள்ள குழந்தைகளிடம் கலந்துரையாடிய மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் எதிர்காலத்தில் என்னவாக விரும்புகிறீர்கள் எனக் கேட்டறிந்து, குழந்தைகளுக்கு இனிப்புகள் வழங்கி,குழந்தைகளின் தேவையை நிறைவேற்றிட பெற்றோர்கள் படிக்க வைக்க அறிவுறுத்தினார்.

பின்னர் கரந்தையில் உள்ள நெல் நேரடி கொள்முதல் பார்வையிட்டு குறுவை சாகுபடி நெல்கள் அனைத்தும் கொள்முதல் செய்யப்பட்டுள்ளதா? கொள்முதல் செய்யப் பட்டுள்ள நெல் மூட்டைகள் சேமிப்பு கிடங்கிற்கு எடுத்துச் செல்லப்பட்டுள்ளதா? என ஆய்வு மேற்கொண்டார்.தொடர்ந்து மேம்பாலம் அருகே உள்ள உணவு பாதுகாப்பு மற்றும் மருத்துவ நிர்வாகத் துறை சார்பில் செயல்பட்டு வரும் உணவு பகுப்பாய்வு கூடத்தை பார்வையிட்டு ஆய்வு செய்து உணவு பகுப்பாய்வு செய்யப்படுவது குறித்து கேட்டறிந்து நேரில் மாவட்ட ஆட்சித் தலைவர் ம.கோவிந்த ராவ் இ.ஆ.ப. அவர்கள் பார்வையிட்டார்

இவ்வாய்வின் போது தஞ்சாவூர் மாநகராட்சி ஆணையாளர் திருமதி.ஜானகிரவீந்திரன்,நகரமைப்பு அலுவலர்திரு.ராஜசேகர்,நகர்நல அலுவலர் திரு.நமச்சிவாயம்,உதவி செயற்பொறியாளர் திரு.மகேந்திரன், தஞ்சாவூர் வட்டாட்சியர் திரு.வெங்கடேஸ்வரன்,உணவு பகுப்பாய்வு கண்காணிப்பாளர் திரு.வல்லவரசு மற்றும் பலர் உடனிருந்தனர்.

---

செய்தி வெளியீடு : செய்தி - மக்கள் தொடர்பு அலுவலர், தஞ்சாவூர்.